**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 17.07.2025**
**OS. No. 56/2017**
**வழக்கு சாட்சி DW.1– உஷாராணி , க/பெ.காமேஸ்வரன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

5) நான் மகளிர் சுய உதவி குழு குறித்து ஏதேனும் குறிப்பிட்டு மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அரசு மனு கொடுக்க சொன்னதன் பேரில் மனு அளித்தேன். நாங்கள் 15 ஆண்டுகளாக குடியிருப்பதாக சொல்லி தான் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட மனுவுடன் ஊர் பொதுமக்களின் வாக்குமூலம் இணைத்துதான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சுமார் 6, 7 ஊர் மக்கள் அந்த வாக்குமூலத்தில் கையொப்பம் செய்துள்ளார்கள். ஊர் பொதுமக்களிடம் என் கணவர் கையொப்பம் வாங்கினார் அந்த விவரம் எனக்கு தெரியும். மேட்டுர் வருவாய் துறையிலிருந்து யாரும் வந்து விசாரிக்கவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. என் மனுவுடன் இணைத்துள்ள வாக்குமூலத்தில் உள்ள அனைத்து கையெழுத்துக்களும் ஒரே நபர் தான் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் ஊர் மக்களிடம் கையொப்பம் எதுவும் பெறவில்லை என்றும், அனைத்து கையொப்பமும் ஒரே நபரிடமிருந்து பெறப்பட்டது என்றால் சரியல்ல.

6) யார் யார் கையொப்பம் செய்துள்ளனர் என்றால் எங்கள் தெருவில் வசிப்பவர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள். நீண்ட நாள் ஆனதால் அவர்கள் பெயர்கள் எனக்கு தெரியவில்லை. வாதியின் பாஸ்போட் தாவா சொத்தின் முகவரியில் தான் உள்ளது என்றால் சரியல்ல. வாதியின் தகப்பனார் லட்சுமண கவுண்டர் உயிருடன் இருக்கும்வரை வாதி அவரை பராமரிக்கவில்லை என்ற விவரம் குடும்ப நபர்கள் பேசும் போது தெரிய வந்தது. வருடம் சரியாக நினைவில்லை. தாவா சொத்தில் ஏற்கனவே மின் இணைப்பு இருந்தது, அதன் மின் இணைப்பு எண் எனக்கு தெரியுமா என்றால்

தெரியாது. அந்த மின் இணைப்பு எப்போது துண்டிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை, சொத்திற்கு பட்டா பெற்ற விவரம் மட்டும் தான் எனக்கு தெரியும், சொத்து குறித்த மற்ற விவரங்கள் என் கணவருக்கு தான் தெரியும். மேற்கண்ட மின் இணைப்பு மோசடியாக துண்டிக்கப்பட்டு, அமுதா என்பவரின் பெயருக்கு மாற்றப்பட்டது என்றால் சரியல்ல. மேற்கண்ட அமுதா எனது நாத்தனார் ஆவார். அவர் என் மாமியாரின் அக்கா மகள் ஆவார். மோசடியாக மின் இணைப்பு அமுதா பெயருக்கு மாற்றப்பட்டது என்றும், அது தெரிந்தவுடன் வாதி உடனடியாக நடவடிக்கை எடுத்து, அதை மீண்டும் அவரது தந்தை லட்சுமண கவுண்டர் பெயருக்கு மாற்றப்பட்டது என்றால் சரியல்ல.

7) தாவா சொத்தின் க.எண்.6/23 என்றதை க.எண்.6/20A1 ஆக மாறியதற்கு வாதி ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு குறிப்பிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் கணவருக்கு தான் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண், பரப்பளவு, சக்குபந்தி ஆகியவை என் கணவருக்கு தான் தெரியும். தாவா சொத்தில் ஒரு பார்ட்–க்கு மட்டும் தான் என் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல, முழு நிலத்திற்குமே வழங்கப்பட்டது, எந்த வருடம் வழங்கப்பட்டது என்று நினைவில்லை, சுமார் 13 வருடங்களுக்கு முன்பு வழங்கப்பட்டது. HSD பட்டா என் பெயருக்கு வழங்கப்படவில்லை என்றால் எனக்கு அந்த விவரம் தெரியவில்லை. ஒரு பார்ட்க்கு மட்டும் தான் என் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றும், நான் தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8) 20.07.2017 ம் வருடத்தில் எனக்கு மனைவரி பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த தேதியில் இந்த வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் எனக்கு பட்டா வழங்கியபோது வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை. 2008 மற்றும் 2012 ஆகிய வருடங்களில் என் பெயரிலுள்ள மனைவரி பட்டாவை ரத்து செய்ய வாதி மனு கொடுத்துள்ளார் என்றால் கொடுத்ததாக சொன்னார்கள் எனக்கு முழு விவரம் தெரியாது. நான் 2008 ல் எனக்கு திருமணம் ஆனதிலிருந்து தாவா சொத்தில் தான்

வசித்து வருகிறேன். அதற்கு முன் என் கணவர் அவர் பிறந்ததிலிருந்தே அங்கு தான் வசித்து வருகிறார். என்னிடம் காட்டப்படும் குடும்ப அட்டை என் மாமியார் சகுந்தலா அவர்களின் குடும்ப அட்டை என்றால் சரிதான். **மேற்கண்ட குடும்ப அட்டை நகல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த குடும்ப அட்டையில் 2005 ம் ஆண்டு என் கணவர் வசித்து வந்த முகவரி எண்.6/22B, புதிய கதவு எண்.15/111B, தூக்கணாம்பட்டி கிழக்கு முதல் கல்யாண மண்டபம் அருகில், மேட்டூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9) என் கணவர் எந்த ஆண்டிலிருந்து தாவா சொத்திற்கு வரி செலுத்தி வருகிறார் என்றால் அது என் கணவருக்கு தான் தெரியும். 2012 ம் வருடத்திற்கு பிறகு தான் என் கணவர் பெயருக்கு வரி மாற்றம் செய்யப்பட்டது என்றால் அது என் கணவருக்கு தான் தெரியும். கந்தாய ரசீது என்பது விவசாய நிலத்திற்கு தான் வரும் என்றும், தாவா சொத்து வீடு என்பதால் அதற்கு கந்தாய ரசீது வராது என்றும், நாங்கள் அதை இந்த வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளோம் எனறால் சரியல்ல. வாதி வருவாய் துறைக்கு ஆட்சேபனை மனு கொடுத்தபிறகு தான் நான் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களும் தயாரிக்கப்பட்டது என்றும், வழக்கு நிலுவையில் இருந்தபோதும் அதை பொருட்படுத்தாமல் என் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், அதனால் அந்த பட்டா மற்றும் நாங்கள் தாக்கல் செய்த வருவாய் ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல. நாங்கள் எங்கள் செல்வாக்கை பயன்படுத்தி பட்டா மற்றும் வருவாய் ஆவணங்களை பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் ஒருபோதும் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் என் கணவரின் குடும்பம் சார்ந்தவர்கள் பெயரில் தான் இருந்தது யார் பெயரில் இருந்தது என்று எனக்கு தெரியவில்லை.

10) தாவா சொத்து ஆதியில் வாதியின் தகப்பனார் லட்சுமண கவுண்டருக்கு அரசால் வழங்கப்பட்டது என்றும், அவர்களின் குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகபிரிவினை மூலம் வாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்குரிய அனைத்து வருவாய் ஆவணங்களும் ஆதியில் லட்சுமண கவுண்டர் பெயரில் தான் இருந்தது

என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. தாவா சொத்து குறித்து எவ்வித விவரமும் தெரியாமல் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அதனால் இந்த வழக்கு வாதிக்கு ஆதரவாக தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.